**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 350/2021
.ம.சா.2 பாலகிருஷ்ணன்

| | |
|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 20.08.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்.

நான் இந்த வழக்கில் 3ம் நபர். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது மூ.த.சா.ஆ1.

3 மற்றும் 5 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

நானும், மனுதாரரும் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கு நான் என்ன உறவுமுறை என்றால் அத்தை உறவு ஆவார். குற்ற இறுதியறிக்கை இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அவரது வாக்குமூலத்தில் விபத்தின் போது நான் அருகில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

முருகேஸ்வரின் மகள் பெயர் பிரபா என்றால் சரிதான். பிரபாவின் கணவர் பெயர் சேர்மம் என்றால் சரிதான். விபத்து நடந்த பின்னர் சேர்மம் என்பவர் தான் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்தின் போது மனுதாரர் மதுரை சாலையில் சாலைக்கு மேற்குபுறம் மண் தரையில் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது சிவசக்தி என்ற சிவா என்ற நபர் டி.என்.76.எம்.6849 என்ற இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து அஜாக்கிரதையாக என் அத்தை மீது மோதிவிட்டார் என்றால் சரிதான். அதனால் எனது அத்தைக்கு இடதுகாலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த சிவசக்தி என்ற சிவா நடுரோட்டில் விழுந்து விட்டார் என்றால் சரிதான். அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த முகம்மது வாலி என்பவர் டி.என்.76.ஏபி.2248 என்ற மாருதி ஆமினி காரை அதிவேகமாக ஒட்டி வந்து சிவசக்தி என்ற சிவாவின் இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார் என்றால் சரிதான். அதனால் ஆமினி காருக்கு பஞ்சர் ஏற்பட்டு சாலையின் கீழ்புறம் நின்றுவிடடது என்றால் சரிதான். அதை தொடர்ந்து கே.எல்.25 டி.5758 என்ற காரை முகம்மது ரபி என்பவர் ஒட்டி வந்து சிவசக்தி என்ற சிவா மீது ஏறி இறங்கிவிட்டது என்றால் சரிதான். அந்த இரண்டு கார்களும் முருகேஸ்வரி மீது மோதவில்லை என்றால் சரியல்ல. மோதியது. மனுதாரர் முருகேஸ்வரி மீது இரண்டு கார்களும்

மோதவில்லை என்றும், மனுதாரர் என் அத்தை என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவசக்தி என்ற சிவாவின் அப்பா பெயர் செல்வக்குமார் என்றால் சரிதான். அவரது தாயார்பெயர் சாந்தி என்றால் தெரியாது. சிவாசக்தி என்ற சிவா என்பவருக்கு கார்த்திக்குமார், மனோஜ்குமார் வாரிசுகள் என்றால் தெரியாது. சிவாசக்தி என்ற சிவா ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயம் காப்பீடு இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. சிவாசக்தி என்ற சிவா என்பவர் விபத்து சமயம் அவர் இளவர் என்றால் சரிதான். சிவாசக்தி என்ற சிவா மட்டும் தான் இருசக்கர வாகனத்தை என் அத்தை மீது மோதிவிட்டார் என்றும், அப்போது காப்பீடு இல்லாததால் இரண்டு கார்களும் என் அத்தை மோதிவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சாலையின் மத்தியில் என் அத்தை கிடக்கவில்லை என்றும், மேற்கு பக்கம் தான் அடிபட்டு கிடந்தார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மனுதாருக்கு விபத்தை ஏற்படுத்தியது விபத்தில் இறந்து போன சிவாசக்தி என்ற சிவா மட்டும் தான் என்றால் சரியல்ல. மனுதாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.